**செய்தி வெளியீடு எண் : 1525** **நாள் : 31.07.2023**

**ஃபாக்ஸ்கான் நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 6000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 1600 கோடி ரூபாய் முதலீட்டில் மொபைல் உதிரிபாகத் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு**

ஃபாக்ஸ்கான் குழுமத் தலைவர் திரு. யங் லியு அவர்களையும் அவரது அணியினரையும் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தேன். தமிழ்நாட்டில் தொடங்க சாத்தியமுள்ள பல்வேறு முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்தோசிக்கப்பட்டது. 6000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 1600 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொபைல் உதிரிபாகத் தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் எனது முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் மின் வாகனங்கள் மற்றும் மின்னணு உதிரிபாகங்கள் துறை சார்ந்த முதலீடுகள் குறித்தும் கலந்தாலோசித்தோம். மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் துறையில் ஆசியாவின் புதிய உற்பத்தி மையமாகத் தமிழ்நாட்டை உயர்த்தும் நம் இலட்சியத்தின் மற்றுமொரு மைல்கல்லாக இச்சந்திப்பு அமைந்தது.

********

Was delighted to meet the Foxconn Group Chairman Mr.Young Liu and his team. Various investment opportunities in Tamil Nadu were discussed. Investment commitment to establish a mobile component manufacturing facility in Kancheepuram district for Rs. 1600 crore with a potential employment for 6000 persons was signed in my presence. We also discussed further investments in EV and electronic components. Another milestone in our ambition to make TN the new emerging electronics manufacturing hub of Asia!

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in